# ஏப்ரல் - 24 - திங்கள்

**புனித சிக்மரிங்கம்**

**ஆயினும், ஆண்டவரே நீரே என் மாட்சி: என்னைத் தலைநிமிரச் செய்பவரும் நீரே. திபா. 3:3**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி4 : 23 – 31

விடுதலை பெற்ற அவர்கள், தங்களைச் சேர்ந்தவர்களிடம் வந்து, தலைமைக் குருக்களும் மூப்பர்களும் தங்களுக்குக் கூறிய யாவற்றையும் அறிவித்தார்கள். இவற்றைக் கேட்ட யாவரும் ஒரே மனத்துடன் தங்கள் குரலைக் கடவுள்பால் எழுப்பி, பின்வருமாறு மன்றாடினர் "ஆண்டவரே, "விண்ணுலகையும் மண்ணுலகையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தவர் நீரே".எங்கள் தந்தையும் உம் ஊழியருமாகிய தாவீது வாயிலாக தூய ஆவி மூலம் "வேற்றினத்தார் சீறி எழுவதேன்? மக்களினங்கள் வீணாகச் சூழ்ச்சி செய்வதேன்?பூவுலகின் அரசர்களும் தலைவர்களும் ஆண்டவருக்கும் அவர்தம் மெசியாவுக்கும் எதிராக அணிவகுத்து நின்றனர்" என்று உரைத்தீர்.அதன்படியே இந்நகரில் உம்மால் அருள்பொழிவு பெற்ற உமது தூய ஊழியராகிய இயேசுவுக்கு எதிராக ஏரோதும் பொந்தியு பிலாத்தும் பிற இனத்தவரோடும் இஸ்ரயேல் மக்களோடும் ஒன்றுதிரண்டனர்.உமது கைவன்மையும் உமது திட்டமும் குறித்து அனைத்தையும் அவர்கள் செய்து முடித்தனர். இப்போதுகூட ஆண்டவரே, அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும். உம் அடியார் முழுத் துணிவுடன் உமது வார்த்தைகளை எடுத்துக்கூற அருள் தாரும்.உமது தூய ஊழியர் இயேசுவின் பெயரால் உமது கையை நீட்டி நோயுற்றோருக்கு நலமளியும் அடையாளங்களும் அருஞ் செயல்களும் நடைபெறச் செய்யும்." இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறினர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்

## நற்செய்தி : யோவான் 3 : 1 – 8

அக்காலத்தில் பரிசேயர் ஒருவர் இருந்தார் அவர் பெயர் நிக்கதேம். அவர் யூதத் தலைவர்களுள் ஒருவர். அவர் ஓர் இரவில் இயேசுவிடம் வந்து, "ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். கடவுள் தம்மோடு இருந்தாலன்றி, நீர் செய்யும் இவ்வரும் அடையாளங்களை யாரும் செய்ய இயலாது" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்" என்றார். நிக்கதேம் அவரை நோக்கி, "வயதானபின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? அவர் மீண்டும் தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா?" என்று கேட்டார். இயேசு அவரைப் பார்த்து, "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உமக்குக் கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம். காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும் எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும்" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது நாங்கள் ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்கவேண்டும் மறுருபமாக மாறவேண்டும் என்று கூறுகின்றது. இம் மறுபடி பிறப்பதென்பது நாங்கள் பாவ வாழ்விலிருந்து விடுதலை பெற்று தூய வாழ்வு வாழ்வதேயாகும். இவ்வாறு வாழ்ந்து நீரினாலும், தூய ஆவியினாலும் நிரப்பப்பட்டு தூய வாழ்வு வாழ்ந்தோமேயானால் தான் இறையாட்சிக்கு உட்செல்ல தகுதியானவர்கள் ஆவோம் என்பதை இன்றைய வாசகங்கள் எடுத்து கூறுகின்றது. ஆம் நாங்களும் திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலம் நீரினாலும், ஆவியாலும் நிரப்பப்பட்டு கனிகளையும், கொடைகளையும் பெற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் ஆவியின் கனிகளான அன்பு, அமைதி, பொறுமை, சாந்தம்......... இவைகளைக் கடைப்பிடித்து நாங்கள் இறையாட்சிக்கு உட்செல்ல தகுதியானவர்களாக இருக்கின்றோமா? ஏனென்றால் எமது வாழ்வானது மனித இயல்பிற்கு உட்பட்டவையாகவே காணப்படுகின்றது. மனித இயல்பிற்கு உட்பட்டவர்கள் மனித இயல்பை கொண்டிருப்பர் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பவர் ஆவிக்குரிய இயல்பிற்கு உட்பட்டிருப்பா ̇(யோவா.3:6)ல் பார்க்கின்றோம். எனவே இறைமைந்தனாம் இயேசு இறுதிவரை எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை உணர்ந்தவர்களாக ஆவியானவரின் வழிநடத்தலில் நாங்கள் பயணம் செய்ய எங்களை தயார் படுத்துவோம்.